**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC. 345/2023 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா. 3 |
| Name : | திரு. காந்தி |
| Father's Name/Husband Name: | திரு. கருப்பண்ணன் |
| Village : | அரும்பாவூர் |
| Taluk : | வேப்பந்தட்டை |
| Age : | 55/ 2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 09.10.2025

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. S. தினேஷ் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**( எதிரிகள் 1 அண்ணாதுரை , எதிரி 2 சூர்யா, எதிரி 3 ஆரியமலை ஆகியோர்கள் ஆஜர்)**

**முதல் விசாரணை**

1(i) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 இந்திராணி எனது தம்பி மனைவி. எதிரிகள் அனைவரையும் தெரியும். கடந்த 05.07.2019 அன்று இரவு சுமார் 8 மணியளவில் அ.சா.1 இந்திராணி வீட்டிற்கு வந்து எதிரி சூர்யாவின் தாயார் சண்டை போட்டுக் கொண்டிருந்தார். எதிரி சூர்யாவின் தாயார் பெயர் தெரியாது. எதிரி சூர்யா என்ன சண்டை போட்டுக் கொண்டிருக்கிறீர்கள் என்று சொல்லி, சைக்கிள் செயினை இந்திராணியின் மண்டையில் ஓங்கி அடித்துவிட்டார். இந்திராணியின் மண்டையிலிருந்து இரத்தம் ஊற்றியது. அதன் பின்பு கேஸ் கொடுத்தால் உன்னை கொன்றுவிடுவேன் என்று சொல்லி எதிரி சூர்யா மிரட்டினார். அதன்பிறகு என் தம்பி மனைவி புகார் கொடுத்தார். இதுவரையிலும் போலிசார் யாரும் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சியை பகுதி பிறழ் சாட்சியாக கருதி அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது**

**அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரிகள் அண்ணாதுரையும் ஆரியம்மாளையும் சம்பவம் சமயத்தில் என்ன செய்தார்கள் என்று தெரியுமா என்றால் சண்டை போட்டுக் கொண்டிருந்தனர். அந்த சம்பவத்தில் லோகநாதனுக்கு என்ன ஆனது என்றால் அவரும் என் மனைவியை ஏன் அடிக்கிறீர்கள் என்று சண்டை போட்டுக் கொண்டிருந்தார். கடந்த 07.05.2019 இரவு சுமார் 8.30 மணியளவில் தான் சம்பவம் நடந்தது என்றால் சரிதான். அன்றைய தினம் இரவு 8.30 மணியளவில் எதிரிகள் அண்ணாதுரையும், ஆரியமாலையும் அ.சா1 யை தகாத வார்த்தைகளால் பேசி காவல் நிலையம் சென்று கம்ப்ளெய்ண்ட் கொடுத்த என்று கேட்டு திட்டினார்கள் என்றும், லோகநாதனை அடித்து கீழே தள்ளினார்கள் என்றும் சொன்னால் சரிதான்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

அ.சா.1 இந்திராணி வீடும், எனது வீடும் பக்கம் பக்கம் என்றால் அவர்கள் வேற வீதி நான் வேற வீதி. சம்பவம் நடந்ததை நான் நேரடியாக பார்க்கவில்லை அதன்பிறகு தான் நான் போனேன் என்றால் ஆமாம். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதி 05.07.2019 என்றால் சரிதான். சம்பவம் நடந்து முடிந்த பிறகு தான் சம்பவ இடத்திற்கு சென்றேன் என்றால் சம்பவம் நடக்கும்போதே சென்றேன். சம்பவ இடத்திற்கு நான் எதற்காக சென்றேன் என்று நான் முதல் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றாலும், பேசிக் கொண்டிருக்கும்போது கீழே விழுந்து காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. அ.சா.1 எனது தம்பியின் மனைவி என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை : இல்லை**

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-xxxxxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.